11th August 1965]

இங்கே இருந்தவர்கள் தேவஸ்தானத்தைச் சேர்ந்த நிதியை சிலோனுக்கு எடுத்துச் சென்று அதை அங்கே எஸ்டேட்டில் இன்வெஸ்டு செய்திருக்கிறார்கள் என்ற ஒரு விவரம் இருக்கிறது. அதை திருப்பி அனுப்பவேண்டும் என்று கோரப்பட்டது. ஆனால், தற்பொழுது இருக்கிற விதியின்படி அந்தப் பணத்தை இங்கே அனுப்புவதற்கில்லை. இங்கே இருக்கிற எஸ்டேட்டில் அந்த அளவுக்கு நிதியை இன்வெஸ்டு செய்யுங்கள் என்று அறநிலைய இலாகாவினர் கேட்டார்கள். அதற்கு அவர்கள் மறுத்தார்கள். அங்கே இருக்கிற பணம் இங்கே வரவேண்டியிருக்கிறது. இதைப் பற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக இதற்கு பிரத்தியேகமாக அனுமதி அளிக்கவேண்டுமென்று கோரியிருக்கிறது. இதுதான் இப்பொழுது நிலை. 1963-ல் ஒன்றுமில்லை.

ஸ்ரீ வானமாமலைப் பெருமாள் கோவில் பூட்டப்பட்டிருத்தல்

* 192 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரியிலுள்ள ஸ்ரீ வானமாமலைப் பெருமாள் கோவில் வழக்கத்திற்கு மாறாக பூட்டப்பட்டது பற்றி அரசாங்கத்திற்குப் புகார்கள் அண்மையில் ஏதேனும் வந்தனவா?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) A telegram was received by the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments, Tirunelveli, from one Sri Pakshirajan complaining that the Sayarakshai Pooja in Sri Vanamamalai Perumal temple, Nanguneri town, was not performed on 12th August 1964 and that Sri Sadagopan's party was waiting for worship.

(b) The matter is under investigation by the Police, and after the result of the enquiry is known, suitable action will be taken by the Commissioner.

ஸ்ரீ வானமாமலைப் பெருமாள் கோவில் தர்மகர்த்தாக்கள்

* 193 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரியிலுள்ள ஸ்ரீ வானமாமலைப் பெருமாள் கோவிலின் தர்மகர்த்தாக்கள் யார், யார் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : His Holiness Ramanuja Jeer Swamigal, the Madathipathi of Sri Vanamamalai Math, is the present hereditary trustee of the above temple.